பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 07 | செவ்வாய்க்கிழமை | 21.05.2024 | அதிர்வு 294

## அசிட் தாக்குதலில் பெண் ஒருவர் சாவு



குடும்பப் பெண் ஒருவர் அசிட் தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் 06



## ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு இலங்கையில் இன்று துக்க தினம்

ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசியின் திடீர் மறைவையொட்டி இலங்கையில் இன்று துக்க தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி, வெளிவிவகார அமைச்சர் ஹூசைன் அமீர் அப்துல்லாஹியன் உள்ளிட்ட 9 பேர் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தனர். அவர்களை நினைவு கூரும் வகையில் துக்கத் தினத்தை இலங்கை அரசு அறிவித்துள்ளது.

அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் பிரதீப சரத்ன வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் 06

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பொதுத் தேர்தலுக்கு வாய்ப்பு!

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு வாய்ப்புள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

**தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.** 06




# களுத்துறையில் ஒருவர் சுட்டுப் படுகொலை!




களுத்துறை, மே.21

களுத்துறை, கட்டுகுருந்த ரயில் நிலையப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே ரி – 56 ரகத் துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

உயிரிழந்தவரின் வீட்டில் வைத்து இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய 4 இலங்கையர்கள் இந்தியாவில் சிக்கினர்



ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 4 இலங்கைப் பிரஜைகள், இந்தியாவின் அகமதாபாத் நகரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய பயங்கரவாத 06




இன்று நீண்ட – ஆழமான – விடயம் எதுவும் இல்லை. சுருக்கமான ஒரு ஹாஸ்யத் தகவல் தான். அதுவும் கொழும்பில் பத்திரிகை ஆசிரியரான நண்பர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றை வாசகர்களுடன் பகிரப் போகிறேன். அவ்வளவுதான்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய நிலைமை நம் எல்லோருக்கும் ஓரளவு தெரிந்ததே.

மைத்திரிபால சிறிசேன அணியும், சந்திரிகா அணியும் மாறி மாறி மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகளைத் தாக்கல் செய்து, பெறுகின்ற இடைக்கால 06




# இலங்கை - இந்தோனேசியா உறவுகளை பலப்படுத்த இரு நாட்டுத் தலைவர்களும் உறுதி எடுத்துக்கொண்டனர்

இந்தோனேசிய தலைநகர் பாலியில் நடைபெற்று வரும் பத்தாவது உலக நீர் மாநாட்டுக்கு இணையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவிற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இந்தோனேசிய ஜனாதிபதி இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சிநேகபூர்வமாக வரவேற்றார். இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ உரையாடலின் பின்னர், இருதரப்பு கலந்துரையாடல்களும் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகளை மேலும் பலப்படுத்த இரு நாட்டு தலைவர்களும் உறுதி எடுத்துக்கொண்டமையோடு, பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இரு நாட்டுத் தலைவர்களும் பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்துக் கவனம் செலுத்தியதோடு, உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பெண்டுக் மாநாட்டில் பங்குபற்றியதிலிருந்து காணப்படும் இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகளை நினைவுகூர்ந்து தனது உரையை ஆரம்பித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் இவ்வாறான மாநாடுகளின் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் இந்தோனேசிய ஜனாதிபதி விடோடோவின் தலைமைத்துவத்திற்கு ஜனாதிபதி நன்றி கூறினார்.

உலக நீர் உச்சி மாநாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீர் வள முகாமைத்துவத்தில் உலக நாடுகள் எதிர்கொள்ளும் பொதுவான நிதிச் சவால்களுக்குத் தீர்வு காணும் நோக்கில் உலகளாவிய கூட்டு நிதியத்தில் பங்கேற்க இலங்கை ஆர்வமாக உள்ளதெனவும் சுட்டிக்காட்டினார்.




கூட்டுச் செயலகம் ஒன்றை ஆரம்பித்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தோனேசியாவிற்கு பாராட்டுக்களை தெரிவித்தமையுடன், இலங்கைக்கான அதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளைப் பலப்படுத்த 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வர்த்தக ஒப்பந்தத்தில் கைசாத்திட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அத்துடன், இந்து சமுத்திரப் பிராந்திய எல்லை நாடுகளின் ஒன்றியத்திற்கு இலங்கை தலைமைத்துவம் வகிப்பதை தாம் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த இந்தோனேசிய ஜனாதிபதி, அதற்குத் தனது பங்களிப்பை வழங்க எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் இலங்கை மேற்கொண்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் தாய்லாந்து, பங்களாதேஷ் மற்றும் மலேசியாவுடன் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் குறித்து எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்குள் இந்தோனேசியாவுடன் வர்த்தக உடன்படிக்கைக்குள் பிரவேசிப்பதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்தும் குறிப்பிட்டுள்ள இலங்கை ஜனாதிபதி, இலங்கை சந்தைக்கு வரும் இந்தோனேசிய மருந்துகள் தொடர்பில் இலங்கை சுகாதார அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும் உறுதியளித்தார்.

இந்த இருதரப்பு கலந்துரையாடலின்போது இந்து சமுத்திர பிராந்திய பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது. ஆசியான் அமைப்பின் இந்தோ-பசிபிக் எதிர்கால நோக்கை ஆதரிப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்து சமுத்திர விவகாரங்கள் தொடர்பாக நெருக்கமான இருதரப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பிராந்திய வர்த்தக ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இரு நாட்டு அரச தலைவர்களுக்கும் இடையில் தொடர்ச்சியான சந்திப்புகளை நடத்துவது தொடர்பிலும் இந்தோனேசியாவுடன் நிரந்தர இருதரப்பு உடன்படிக்கையில் ஈடுபடுவது தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது யோசனையொன்றை முன்வைத்தார்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இலங்கையின் வகிபாகத்தை வலியுறுத்தி, உலகளாவிய கலப்பு நிதிக் கூட்டணிக்கு இணை அனுசரணை

03

# யாழில் 400 பட்டதாரிகளுக்கு சனியன்று நியமனக் கடிதங்கள்

வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு 400 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கவுள்ளார்.

யாழ்ப்பாணம் , தந்தை செல்வா கலையரங்கில் எதிர்வரும் சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி தலைமையில் நடைபெற வுள்ள நிகழ்வில் 400 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட வுள்ளது.

நியமனம் பெறவுள்ள பட்டதாரிகளுக்கான அழைப்பு கடிதங் கள் வடமாகாண கல்வி அமைச்சினால் நேற்றைய தினம் திங்கட் கிழமை முதல் அனுப்பி வைக்கபடுகின்றன எனத் தெரிவிக்கப்படு கிறது.





# டயானா கமகேயை காணவில்லையாம்!

கடவுச்சீட்டு விவகாரம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயைச் சந்தேகநபராகக் குறிப்பிட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அதன்படி, உரிய விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கு மாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரை அவரது இல்லத்தில் காணவில்லை என குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கொழும்பு பிரதான நீதிவானிடம் தெரிவித்துள்ளனர்.

# சஜித்துடன் ஜூன் 6 ஆம் திகதி விவாதத்துக்கு அநுரகுமார ரெடி

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் எதிர்வரும் ஜூன் 6 ஆம் திகதி விவாதம் நடத்துவதற்குத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தயாராகவுள்ளார் என்று அக்கட்சி யின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்மொழியப்பட்டிருந்த திகதிகள் தொடர்பில் பதிலளிக்கையிலேயே, ஜூன் 6 ஆம் திகதி விவாதத்துக் குத் தயார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், தலைவர்களுடனான விவாதத்துக்கு முன்னர் இரு கட்சிகளின் பொருளாதாரக் குழுக்களுக்கிடையிலான விவாதத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்திருந்த முன்மொழிவு தொடர்பில் தேசிய மக்கள் சக்தி பதிலளிக்கவில்லை.




# இலங்கை - இந்தோனேசியா உறவுகளை பலப்படுத்த இரு நாட்டுத் தலைவர்களும் உறுதி எடுத்துக்கொண்டனர்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கியமை தொடர்பில் ஜனாதிபதி ஜோகோ விடோடோ, இலங்கைக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்த முன்னெடுப்புக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகை




யில், இரு நாடுகளினதும் தொடர்புடைய அமைச்சுக்களுக்கு இடையில் தொடர்ச்சியான ஒத்துழைப்பைப் பேணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தோனேசிய ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

தனது பதவிக்காலம் எதிர்வரும் காலங்களில் முடி வடையும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ஜோகோ விடோடோ, புதிய இந்தோனேசிய நிர்வாகம் இலங்கையுடனான தற்போதைய உறவுகளை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தோனேசியாவின் புதிய தலைமைத்துவத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்த ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கான விஜயத் தில் இணைந்து கொள்ளுமாறு இந்தோனேசிய ஜனா திபதி விடோடோவுக்கு பிரத்தியேகமாக அழைப்பு விடுத் தார்.



# மே 22 இல் இரண்டு புதிய சட்ட மூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன

## பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தகவல்



**"நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியமான இரண்டு சட்ட மூலங்களை மே மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது."**

**- இவ்வாறு பதில் நிதியமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே செஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு சட்டமூலங்களை மே மாதம் 22ஆம் திகதி சமர்ப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த சட்டமூலங்களில் ஒன்று, மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதைத் தடுப்பது தொடர்பாக முன்வைக்கப்படும் "பொருளாதார பரிமாற்றம் சட்டமூலம்" (Economic Transformation law) ஆகும்.

இந்த சட்டமூலம் சர்வதேச நாணய நிதியத்தால் முன்மொழியப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தின்படியே இந்த சட்டமூலம் முன்வைக்கப்படுகின்றது என்பதைக் கூற வேண்டும். கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம் தற்போது ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிலை எதிர்காலத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்.

மேலும், மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படாத வகையில், நாட்டின் அரச நிதி முகாமைத்துவம் மிகவும் உகந்த நிலையில் பேணப்பட வேண்டும்.

இது தொடர்பான பொறுப்புக்கூறல் தொடர்பில் கவனம் செலுத்தி, அரச நிதியை முறையான முகாமைத்துவம் செய்வதற்காக "அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம்" எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான கூட்டு வேலைத்திட்டத்தில் இது தொடர்பில் எமக்கு சுட்டிக்காட்டப்பட்டது. நாட்டின் எதிர்கால நிதி நிர்வாகத்தில் இது மிகவும் முக்கியமான சட்டமூலம் என்பதையும் கூற வேண்டும்.

இந்த இரண்டு சட்ட மூலங்களும் இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானவை என்பதையும் குறிப்பிட வேண்டும். இந்த இரண்டு சட்டமூலங்களிலும் பல தொழில்நுட்ப விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பொருளாதார போக்கை மாற்றாமல் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கை மேலும் உறுதிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார பரிமாற்றம் குறித்த சட்ட மூலம் பற்றி மேலும் விளக்கினால், நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது மிகவும் முக்கியமானது. 2023 இன் இரண்டாவது மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் பொருளாதாரச் சுருக்கம் ஏற்பட்டது. ஆனால் நான்காவது காலாண்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.5 வீதம் எட்டப்பட்டது. அதனுடன், பொருளாதார நன்மை இந்த நாட்டில் மிகக் குறைந்த மட்டத்திற்கும் கிடைக்கத் தொடங்கியது.

மேலும், இந்த நாட்டின் பொருளாதார போட்டித்தன்மையை மேம்படுத்துவதுடன், உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் பொருளாதாரத்தை மாற்றியமைப்பது, உலகளாவிய ஒத்துழைப்பை நன்கு பேணுவது மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவது அவசியம். அது மாத்திரமன்றி மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய இடங்களில் மாறுதல் போன்ற விடயங்களும் இந்த சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, சர்வதேச வர்த்தகம், வர்த்தக ஒப்பந்தங்கள், காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்களில் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டிய சட்டக் கட்டமைப்பு இந்த சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் புதிய பொருளாதார ஆணைக்குழுவை நிறுவுவது, போட்டித்தன்மையில் முதலீடுகளை ஈர்ப்பது, முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவது, சர்வதேச வர்த்தகத்தை விரிவுபடுத்துவது, தேசிய உற்பத்தித் திறன் ஆணைக்குழுவை நிறுவுவது மற்றும் ஏற்றுமதி தொடர்பான நிறுவனங்களை ஸ்தாபிப்பது குறித்து இந்த சட்டமூலம் ஊடாக கவனம் செலுத்தப்படும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

குறிப்பாக பொருளாதார பரிமாற்றம் தொடர்பாக நாம் எடுத்த தீர்மானங்களுக்கு நாடாளுமன்றம் அண்மையில் அங்கீகாரம் அளித்தது. 2022 இல், அரச கடன் விகிதம் 128 வீதமாக இருந்தது. 2032 ஆம் ஆண்டாகும் போது அது 95 வீதம் குறைவாக பேணப்பட வேண்டும்.

மேலும், மொத்தத் தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 34.6 வீதமாக இருந்த அரச நிதித் தேவையை 2032 ஆம் ஆண்டளவில் 13 வீதம் குறைவாக பேண வேண்டியது அவசியமாகும்.

கடன் சேவையும் மிக முக்கியமானது. கடனைச் செலுத்தக்கூடிய கடன் நிலைபேறான நாடாக இலங்கையை மாற்ற முயற்சிக்கின்றோம். 2022 இல் 9.4 வீதமாக இருந்த கடன் செலுத்தும் விகிதத்தை 2027 ஆம் ஆண்டாகும்போது 4.5 வீத விகிதத்தை விடவும் குறைக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறான நாட்டிற்காக அடைய வேண்டிய குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் நாட்டின் பொருளாதாரம் எதிர்கொள்ளக்கூடிய எந்தவொரு சவால்களுக்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டிய சட்டமூலமாக இதனை அறிமுகப்படுத்தலாம்.

இந்தச் சட்டமூலங்கள் மூலம் இறுதியில், நிலைபேறான பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கும், கடன் கொடுப்பனவுகளை நிலைபேறான மட்டத்தில் பேணுவதற்கும், விவசாயத்தை நவீனமயமாக்குவதற்கும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை முகாமைத்துவம் செய்வதற்கும், கொடுப்பனவு சமநிலையை நிர்வகிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத் திசை சரியாக வழிநடத்தப்படுவதை நாம் எதிர்பார்க்கிறோம் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

மேலும், அரச நிதி முகாமைத்துவ சட்ட மூலம் ஊடாக பாரிய கருத்தாடல் எழுந்துள்ளது. தற்போதுள்ள சட்டத்தின் பலவீனங்களைக் கண்டறிந்து, எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பொருத்தமான சட்டக் கட்டமைப்பை முன்வைப்பது இதன் மூலம் இடம்பெறுகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்." - என்றார்.

INDSRI FERRY

# வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத கடல் போக்குவரத்து விதிமுறைகளினாலும் காலனிலை மாற்றங்களினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை இயக்கமுடியவில்லை.

**மிக விரைவில் புதிய பயணத் திகதிகள் அறிவிக்கப்படும்.**

**இதுவரை பயணச் சீட்டை பெற்றவர்கள் செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம்.**

மேலும் விவரங்கள் தேவையெனில் customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.



IndSri Ferry Services Pvt Ltd
# 143/1, Uttamar Gandhi Road, Opp The Park Hotel,
Thousand Lights West, Nungampakkam,
Chennai - 600034, Tamil Nadu, India.

Google play | App Store

W: www.sailindsri.com

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தரவுகளையும் விளைவுகளையும் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறுகின்றார் மிஸ்டர் பொதுஜனமான நம் வாசகர்.

ஒருநாள் மைத்திரியின் தலைமைக்கு இடைக்காலத் தடை. சில நாள்கள் சென்றதும் அவரின் இடத்துக்குக் கட்சியின் பதில் தலைவராகத் தெளிவானவர் என்று கூறப்படும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்குத் தடை. பிறகு அதுவரை பதில் பொதுச் செயலாளராகக் கடமையாற்றிய மித்ரபாலாவுக்குத் தடை. இதற்கிடையில் சந்திரிகா அணி தாங்கள் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவையும், பதில் பொதுச் செயலாளராக துமிந்த திஸநாயக்கவையும் தெரிவு செய்தனர் என்று அறிவிப்பு. அதனிடையே மைத்திரிபால சிறிசேன தலைமை பதவியில் இருந்து விலகுவதான அறிவிப்பும், நீதிமன்றத்தினால் பதில் தலைவராக செயல்படத் தடை விதிக்கப்பட்ட அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கட்சியின் புதிய தலைவர் என்ற அறிவிப்பும் வெளியாகின.

தொடர்ந்து அவர் தலைவராகச் செயற்படுவதற்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது என்று கடுவெல மாவட்ட நீதிமன்றம் உத்தரவு என்ற செய்தி. இப்போது விஜயதாஸ ராஜபக்ஷ தலைவராகச் செயல்பட கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மீண்டும் இடைக்கால தடை.

– இப்படி மாறி மாறி வரும் செய்திகளைப் பார்த்துக் குழம்பி, சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த நிலையில் நம்முடைய வாசகர்கள் தடுமாறிப் போய் இருக்கிறார்கள். கட்சி யாருடைய கட்டுப்பாட்டில் இப்போது இருக்கின்றது என்று புரியாத குழப்பம் பலருக்கும்.

இந்தச் சமயத்தில்தான் பத்திரிகை ஆசிரியரான அந்த நண்பர் நேற்று தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

“அண்ணே! ‘கரகாட்டக்காரன்’ படம் பார்த்தீர்களா? அதில் செந்திலுக்கு கவுண்டமணி வழமை போல நான்கு சாத்துச் சாத்தும் கட்டம் நினைவில் இருக்கின்றதா?” – என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டார் அவர்.

“ஆம். படம் பெரும்பாலும் முழுமையாக நினைவில் இருக்கிறது” என்றேன் நான்.

“ஏன் செந்திலுக்கு இப்படிப் போட்டு அடிக்கின்றீர்கள் என்று கதாநாயகன் ராமராஜன் கவுண்டமணியிடம் கேட்பார். ‘கேட்கக் கூடாத கேள்வி ஒன்றைக் கேட்டு விட்டான். அதுதான் அடித்தேன்’ என்று பதில் அளிப்பார் கவுண்டமணி. ‘அப்படி என்ன கேள்வி கேட்டார்?’ என்று மீண்டும் வினாத் தொடுப்பார் ராமராஜன். அதற்கு கவுண்டமணி அந்தக் கேள்வி என்ன என்று சொல்லுவார். உங்களுக்கு அது நினைவில் இருக்கின்றதா?” – என்று கேட்டார் என் நண்பர்.

நாமதான் இந்த சினிமா நகைச்சுவை விடயங்களைப் பார்த்து, ரசித்து,சுவைத்து அதில் மாஸ்டர் டிகிரி வாங்கியவராயிற்றே என்ற எண்ணம் நமக்கு உண்டு அல்லவா? அவர் கேட்டதும் படார் என்று பதில் சொன்னேன்.

“சொப்பன சுந்தரி வைத்திருந்த கார் இது. இப்போது நாம அதை வைத்திருக்கிறோம். சரி, சொப்பன சுந்தரியை இப்ப யார் வச்சிருக்கிறார்கள் என்றுதானே செந்தில் கேட்டார் எனக் கவுண்டமணி கூறுவார்!” என்றேன் நான்.

“கனகச்சிதமான பதில். அதுதான் இப்போது என் கேள்வியும். சுதந்திர கட்சியை இப்போது யார் வைத்திருக்கிறார்கள்?” – என்றார் என் நண்பர்.

நான் சிரித்துக் களைத்துப் போனேன்.

“அதுதான் மக்களின் இன்றைய சந்தேகமும்!” – என்றேன்.

என் நண்பர் இன்னொரு விடயத்தையும் சொன்னார். அதனையும் குறிப்பிடாக வேண்டும்.

சுதந்திரக் கட்சியின் தலைவர் நான்தான் என்று இப்போது இரு அமைச்சர்கள் உரிமை கோருகிறார்கள். ஒருவர் விஜயதாஸ ராஜபக்ஷ. மற்றவர் நிமால் சிறிபால டி சில்வா. ஒரு கட்சியின் தலைமைக்கு உரிமை கோரி எதிரும் புதிருமாக மோதிக் கொண்டிருக்கும் இரு அமைச்சர்களை தமது அமைச்சரவைக்குள்ளேயே வைத்து, அசமாத்தம், சத்தம் சந்தடியின்றி, அமைதியாக ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எப்பேர்ப்பட்ட அரசியல் கில்லாடி என்று அவர் கேள்வி எழுப்பினார்.

நியாயமான கேள்விதான். அதுதான் ரணில் விக்கிரமசிங்க என்ற நரித் தந்திரசாலியின் தனித் திறமை என்றேன் நான்.

## ஜனாதிபதித் தேர்தலு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் எனக் கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையில் ஜனாதிபதியிடமே நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் காணப்படுகின்றது.

எதிர்வரும் ஜுலை மாதம் 16ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தல் விடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு முன்னதாக ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஈரான் ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, அனைத்து அரச நிறுவனங்களிலும் இன்று தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு கோரப்பட்டுள்ளது.

## அசிட் தாக்குதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவம் அம்பலாங்கொடை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேமலதா என்ற 59 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் தனது வீட்டின் சமையல் அறையில் உணவு தயாரித்துக் கொண்டிருக்கும்போது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த நபர் ஒருவர் அவர் மீது அசிட் வீசியுள்ளார்.

இதன்போது, காயமடைந்த குடும்பப் பெண், அயல் வீட்டாரின் உதவியுடன் பலபிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)


எதிர்ப்புப் பொலிஸாரால் அவர்கள் அகமதாபாத் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

அகமதாபாத் விமான நிலையத்தில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று கடந்த 12 ஆம் திகதி தகவல் கிடைத்ததையடுத்து நேற்றுமுன்தினம் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த 27, 33, 35 மற்றும் 43 வயதான நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர்கள் நால்வரின் தொலைபேசிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் பாகிஸ்தானில் உள்ள முகவர்கள் தாக்குதலில் பயன்படுத்தக்கூடிய சில ஆயுதங்களை வழங்க அவர்களுக்கு உறுதியளித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னரே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.







# டெங்கு அபாயத்தைக் குறைப்பதற்கான அவசர நடவடிக்கைகள் குறித்து ஆராய்வு

மழை காரணமாக கொழும்பில் டெங்கு பரவும் அபாயத்தைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மே 26 முதல் ஜூன் முதலாம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரத்தில் கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை தெளிவுபடுத்தும் வகையில் விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளுமாறும் அவர் ஆலோசனை வழங்கினார்.

மேலும், அரச நிறுவனங்கள், மத ஸ்தலங்கள், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் போன்றவற்றில் டெங்கு பரவும் அபாயத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கிய சாகல ரத்நாயக்க, இந்த நடவடிக்கைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலை குறித்த முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் பாதுகாப்பு பதவிநிலைப் பிரதானி சவேந்திர சில்வா ஆகியோர் தலைமையில் இதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் தற்போதைய முன்னேற்றம் குறித்து இங்கு மீளாய்வு செய்யப்பட்டது.

குறிப்பாக மேல்மாகாணத்தில் டெங்கு பரவல் அதிகரிப்பதைக் காட்டும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை மையப்படுத்தி டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்த கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

டெங்கு நோயை கட்டுப்படுத்துவதில் சாகல ரத்நாயக்க வழங்கிய தலைமைத்துவத்தை பாராட்டிய சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால, இந்த வேலைத் திட்டத்திற்கு சுகாதார அமைச்சு முழு ஒத்துழைப்பையும் வழங்கும் எனவும் தெரிவித்தார்.

இது தவிர கொழும்பு நகரில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலிருக்கும் மரங்களை முழுமையாக அகற்றுவது அல்லது அபாயத்தைக் குறைப்பதற்காக கிளைகளை வெட்டுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வெட்டப்படும் மரங்களுக்குப் பதிலாக மரம் நடும் வேலைத்திட்டத்தை தயாரித்து அதன் முன்னேற்றம் குறித்து தெரிவிக்குமாறும் சாகல ரத்நாயக்க ஆலோசனை வழங்கினார்.

மேலும், தூய்மையான மற்றும் கவர்ச்சிகரமான கரையோரத்தை பராமரிப்பதுடன் கழிவு நீரை கடலில் விடுவதற்கு மிகவும் பொருத்தமான வழிமுறையை தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று காலை சாகல ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்தாலோசித்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக செயலணியொன்றை நியமிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் அமைச்சுகளின் அதிகாரிகள், பாதுகாப்புத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.











நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஞானசாரருக்கு மன்னிப்பா?

பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் வண.கலகொட அத்தே ஞானசார தேரருக்கு மீண்டும் பொது மன்னிப்பு வழங்குமாறு மல்வத்து, அஸ்கிரிய , ராமன்ஞ நிகாயா, அமரபுர மகா சங்க சபை பீடாதிபதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2016 ஆம் ஆண்டு கூரகல ரஜமஹா விகாரை தொடர்பான ஊடக விவாதத்தின் போது இன முரண்பாட்டை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு மேல் நீதி மன்றம் நான்கு வருட சிறைத்தண்டனை விதித்தது.

இந்த தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீடு, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும் அவருக்கு மேல் நீதிமன்றம் பிணை வழங்கவில்லை.அதனால் மேன்முறையீடு நிலுவையில் இருக்கும் போதும் அவர் சிறையில் இருக்கின்றார்.

இப்படிச் சிறையில் இருக்கின்றமையும் பொது மன்னிப்பில் வெளியில் வருகின்றமையும் அவருக்கு புதியனவல்ல. நாட்டின் பேரினவாதத்தின் பெயரால் குழப்பங்கள் செய்து, அட்டகாசம் பண்ணுவதில் அவருக்குத்தான் முதலிடம் என்ற ஒரு நிலைமை நீண்ட காலம் இருந்தது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவத்தை ஒட்டிய ஒரு வழக்கு விசாரணைக்கு இடையில் பிரகீத் எக்னலிகொடவின் துணைவியார் சந்தியா எக்னலிகொடவை நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து அச்சுறுத்தியமை உட்பட நீதிமன்ற அவமதிப்பு குற்றங்களுக்காக அவருக்கு சிறைத் தண்டனை முன்னர் வழங்கப்பட்டிருந்தது.

2019 முற்பகுதியில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன அவருக்குப் பொது மன்னிப்பு அளித்து, அவரை விடுதலை செய்தார். அவர் வெளியில் விடுதலையாகி வெளியே வந்த போது அது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியாக இருந்த சுமந்திரன் எச்சரிக்கை அறிவிப்பு ஒன்றை விடுத்தார்.

“கடிநாய் ஒன்று கூண்டிலிருந்து கட்டவிழ்த்து சமூகத்துக்குள் விடப்பட்டிருக்கின்றது. சமூகம் முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது” - என்ற சாரப்பட சுமந்திரன் கூறியிருந்தார்.

இப்போது அவர் நான்கு ஆண்டுகள் கடூழியச்சிறைத்தண்டனை பெற்றுச்சிறைக்குப் போயிருக்கும் சம்பவம் அதற்கு முந்திய விடயம். 2016 ஆம் ஆண்டு அவர் நடந்து கொண்ட செயற்பாட்டுக்கான தண்டனையே இப்போது அவர் அனுபவிப்பது.

ஆயினும், இப்படி அடாவடித்தனமாக - அட்டகாசமாக - பௌத்த, சிங்கள இனவெறிப் போக்கோடு வன்முறையாகவும் வன்மமாகவும் நடந்து கொள்வது அவரது பரவணிப் போக்கு.

2014 இல் கொழும்பு நிப்பன் ஹோட்டலில் சமய சமரசம் பேணிய ஒரு பௌத்த தரப்பின் செய்தியாளர் மாநாடு நடந்து கொண்டிருக்கையில், அதற்குள் அத்துமீறிப் புகுந்து - அடாவடித்தனமாக நுழைந்து - அட்டகாசம் பண்ணி, அந்தச் செய்தியாளர் மாநாட்டையே குழப்பியவர் ஞானசாரர்.

அது தொடர்பான வழக்கில் குற்றம் ஐயத்துக்கிடமின்றி நிரூபணமாக இருந்த சமயத்தில், குற்றத்தை ஒப்புக்கொண்டு மூன்று லட்சம் ரூபா நஷ்ட ஈடு செலுத்துவதோடு விடயத்தை சுமுகமாக சமாளித்தார் அவர். எனினும் இது அவருக்குக் கடைசி வாய்ப்புத்தான் என நீதிவான் அப்போதே எச்சரிக்கத் தவறவில்லை.

ஆனால் அவர் திருந்தவில்லை. 2019 இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொது மன்னிப்பில் வெளியே வந்த பின்னர்தான், வன்னியில் நீராவியடிப் பிள்ளையார் கோவிலின் சுற்றாடலில், நீதிமன்ற உத்தரவையும் மீறும் விதத்தில் சக பிக்கு ஒருவரின் பூதவுடலைத் தாமே முன்னின்று எரித்தார் அவர்.

அவரது இனவெறித் தன்மையுள்ள மோசமான நடத்தை காரணமாக அவருக்கு முன்னர் வழங்கப்பட்ட அமெரிக்க விசாவை 2014 இல் அமெரிக்கா ரத்து செய்தது. முகநூல் புத்தகத்திலிருந்து அவரது கணக்கை முகநூல் நிறுவனம் முடக்கியது.

கோட்டாவின் ஆட்சிக் காலத்தில் ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற ஜனாதிபதி செயலணியின் தலைவராக இருந்து கொண்டு, அவர் காய் நகர்த்திய அரசியலின் போக்கும் பலருக்கும் தெரிந்ததுதான்.

அவருக்குத்தான் மீண்டும் பொது மன்னிப்பு அளித்து அவரை விடுவிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் எழுதி இருக்கின்றனர் நான்கு மகா சங்க சபைகளின் பீடாதிபதிகளும்.

மீண்டும் கடிநாயைக் கூண்டிலிருந்து - கட்டுப்பாடு இல்லாமல் - அவிழ்த்து விடுவதற்கான ஆபத்தான, அபத்த முயற்சி இது...!

# 8 தடவைகள் பா.ஜ.கவுக்கு வாக்களித்த இளைஞன் உத்தரபிரதேசத்தில் கைது



இளைஞன் ஒருவர் 8 தடவைகள் பா.ஜ.கவுக்கு வாக்களித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரபிரதேசத்தின் பரூக்காபாத் பகுதியில் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற 4 ஆம் கட்டத் தேர்தலின் போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மேற்படி இளைஞன் பா.ஜ.க வுக்கு 8 முறைகள் வாக்களித்து அதனை வீடியோவாக வெளியிட்டுள்ளார். வாக்குச்சாவடிக்குள் தொலைபேசி கொண்டு செல்லவும், வாக்காளர் வாக்களிப்பதை படம் பிடிக்கவும் தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

எனினும்,அந்த இளைஞர் சர்வசாதாரணமாக வீடியோவினைப் பதிவு செய்துள்ளமை மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், மேற்படி இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இப்ராஹிம் ரைசியின் மரணம் மிகவும் வருத்தம் அளிக்கிறது

## பிரதமர் மோடி இரங்கல்



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மரணம் தனக்கு மிகவும் வருத்தம் அளிப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

பிரதமர் மோடி தனது எக்ஸ் தளப் பதிவில் அவருக்கு இரங்கல் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மறைந்த ஈரானிய ஜனாதிபதி இந்தியா– ஈரான் இருதரப்பு உறவை வலுப்படுத்துவதற்கு பங்களித்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

“அவரது குடும்பத்தினருக்கும் ஈரான் மக்களுக்கும் எனது இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த துயரமான நேரத்தில் இந்தியா ஈரானுடன் நிற்கிறது” எனவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# கூட்ட நெரிசலால் பேரணியில் இருந்து பாதியில் வெளியேறினார் ராகுல் காந்தி



மக்களவை தேர்தலை முன்னிட்டு இண்டியா கூட்டணி சார்பில், உத்தரப்பிரதேசத்தின் புல்பூர் தொகுதிக்கு உட்பட்ட பாடிலாவில் நேற்று முன்தினம் பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏராளமான தொண்டர்கள் கூடியதையடுத்து கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸாரும், பாதுகாப்பு படையினரும் திணறினர்.

இதையடுத்து, தொண்டர்கள் அனைவரும் அமைதி காக்குமாறு தலைவர்களின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதனை பொருட்படுத்தாமல் தடுப்புகளை உடைத்துக் கொண்டு மேடையை நோக்கி தொண்டர்கள் முன்னேற முயன்றனர்.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு கருதி ராகுல் மற்றும் அகிலேஷ் கூட்டத்திலிருந்து பாதியிலேயே வெளியேறினர்.

# ஈரான் ஜனாதிபதி ரைசியின் ஜனாஸா இன்று அடக்கம்

## 5 நாள்களுக்கு துக்கம் தினம் அனுஷ்டிப்பு



ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி, இப்ரஹிம் ரைசியின் ஜனாஸா அவரது சொந்த இடமான மஷாட்டில் இன்று அடக்கம் செய்யப்படவுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் 63 வயதான ஈரான் ஜனாதிபதி, வெளி விவகார அமைச்சர் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்தனர்.

ஈரான் ஜனாதிபதி இப்ரஹிம் ரைசி, வெளிவிவகார அமைச்சர் ஹொசேன் அலி அப்துல்ஹானியான் உள்ளிட்ட தூதுக் குழுவினர் அஜர்பைஜானுக்கு நேற்று முன்தினம் சென்றனர்.

ஈரான் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்ட கிஸ் கலாசி மற்றும் கொடாஃபரின் நீர்ப்பாசனத் திட்டங்களை திறந்து வைப்பதற்காகவே அவர்கள் இந்த விஜயத்தை மேற் கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சரின் மறைவு தொடர்பாக கவலை வெளியிட்டுள்ள ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயதுல்லாஹ் அல் கமேனி, 5 நாள்களை துக்க காலமாக பிரகடனம் செய்துள்ளார்.

அன்புள்ள ஈரான் மக்களுக்கு தமது கவலையை தெரிவிப் பதாக ஈரான் ஆன்மீகத் தலைவர் அறிவித்துள்ளார்.

ஈரான் ஆன்மீகத் தலைவரின் எக்ஸ் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த செய்தியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"ஈரான் தேசத்திற்காக சேவையாற்றுவோரின் துன்பமற்ற ஆரோக்கியமான வாழ்விற்காக அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும். நாட்டின் நிர்வாகம் எந்த வகையிலும் சீர்குலையாது என்பதால் தேசம் குழப்பமடைத் தேவை யில்லை." – என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஈரான் ஜனாதிபதி, அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சரின் உயிரிழப்பு தொடர்பில் உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

ஈரானின் அமைதிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் ஜனாதிபதி இப்ரஹிம் ரைசி பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளார் என தெரிவித்துள்ள சீன ஜனாதிபதி சீ ஜின் பிங், இப்ரஹிம் ரைசி சீனாவிற்கும் ஈரானுக்கும் இடையிலான மூலோபாய கூட்டுறவை பலப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளதா கவும் கூறியுள்ளார்.

இப்ரஹிம் ரைசியின் உயிரிழப்பு ஈரான் மக்களுக்கு பேரிழப்பு என சுட்டிக்காட்டியுள்ள சீன ஜனாதிபதி, இந்த தருணத்தில் சீனா தனது சிறந்த நண்பனை இழந்துள்ள தாக கூறியுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சரின் உயிரிழப்பு பாரிய வேதனையை ஏற்படுத்தியுள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமர் புட்டின் தெரிவித்துள்ளார்.

தனது உண்மையான நண்பனை இழந்து விட்டேன் என புட்டின் கூறியுள்ளார்.

உயிரிழந்த ஈரான் ஜனாதிபதியை கௌரவிக்கும் நோக்குடன் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாப் ஷெரீப் அந் நாட்டில் துக்கதினத்தை அறிவித்துள்ளார்.

ஈரான் ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும் பாகிஸ் தானின் சிறந்த நண்பர்கள் என பாகிஸ்தான் கூறியுள்ளார்.

இதேவேளை ஈரான் ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டோரின் உயிரிழப்பு தொடர்பில் ஈரான் மக்களுக்கு ஏற்பட்டுள்ள வலியையும் வேதனையும் பகிர்ந்துகொள்வ தாக ஹமாஸ் இயக்கத்தினர் அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளனர்.

காஸா பிராந்தியத்திற்கு எதிராக நடைபெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சிகள் தொடர்பில் உயிரிழந்த ஈரானிய அதிகாரிகளுக்கு கௌரவமான வர லாறு கிடைக்க வேண்டும் என ஹமாஸ் இயக்கத்தினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, லெபனானின் தற்காலிக பிரதமர் நஜிப் மஹதி ஈரான் ஜனாதிபதிக்கு அஞ்சலி செலுத்தும் நோக் கில் 3 நாட்கள் துக்கதினத்தை பிரகடனப்படுத்தியுள் ளார்.

# ஈரான் ஜனாதிபதி உயிரிழந்தமைக்கும் எமக்கும் எந்த வித தொடர்பும் இல்லை

## இஸ்ரேல் திட்டவட்டம்



ஈரான் ஜனாதிபதி இப்ராஹீம் ரைசி ஹெலிகொபடர் விபத்தில் உயிரிழந்தமைக்கும் தங்களது நாட்டும் எந்த வித தொடர்பும் இல்லை என இஸ்ரேல் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

அத்துடன், ஈரான் ஜனாதிபதியின் மரணத்திற்கு இஸ்ரேலின் மொசாட் உளவு அமைப்புதான் காரணம் என சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வந்தன.


இந்த நிலையில், இஸ்ரேல், இந்த சந்தேகங்களை திட்டவட்டமாக மறுத்து வருவதோடு இது தொடர்பாக சர்வதேச செய்தி நிறுவனங் களிடம் பேசிய இஸ்ரேல் அதிகாரிகள், "ரைசியின் ஹெலிகொப்டர் விபத்துக்கு நாங்கள் காரணம் அல்ல, இது எங்களுடைய நடவடிக்கை யும் அல்ல" என திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

# அனர்த்தங்களுக்கு நிதியளிக்கும் வேலைத்திட்டத்தில் உலகின் வட துருவ நாடுகள் தோல்வியடைந்துள்ளன

## உலக நீர் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி உரை

**"உக்ரைனில் ஏற்படும் உயிர் அழிவுகளுக்கு நிதியளிக்க தயாராக இருக்கும், உலகளாவிய வட துருவ நாடுகள் காலநிலையால் ஏற்படும் அழிவுகளை தடுக்கும் பணிகளுக்கு நிதியளிக்க பின்வாங்குகின்றன."**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.**



இந்தோனேசியா, பாலி சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுவரும் 10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்விலேயே ஜனாதிபதி நேற்று இதனை வலியுறுத்தினார்.

10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்வு நேற்று காலை இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ தலைமையில் நடைபெற்றது. இதில் உலக நாடுகள் பலவற்றின் தலைவர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் சிறப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட அரச தலைவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளை இந்தோனேசிய ஜனாதிபதி சிநேகபூர்வமாக வரவேற்றார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,

"காலநிலை மாற்றமும், தண்ணீர் பிரச்னையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகும். தற்போதைய நீர்வள நெருக்கடிக்கு காலநிலை மாற்றத்தின் விளைவுகளே முக்கிய காரணம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

காலநிலை மாற்றத்திற்கான நாடுகளுக்கு இடையிலான குழுவான ஐஊஊஊ இன் 2090 வரையான காலநிலை குறித்த கணிப்பின் படி இலங்கையின் உலர் வலயம் தொடர்ந்து வறண்டு போகும் அதேநேரம், ஈர மண்டலம் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஈரமாக மாறும். அத்துடன் கடல் மட்டம் உயர்வதால் உப்பு நீர் கரையோரப் பகுதிகளுக்குள் ஊடுருவி, நிலத்தில் உப்பு கலக்கும்.

இலங்கையை உதாரணம் காட்டி இந்த விடயத்தை நான் சொல்லியிருந்தாலும் முழு உலகிலும் இதுதான் நடக்கிறது.

உலகளாவிய ரீதியில், நீர் நெருக்கடிக்கான தீர்வு மற்றும் காலநிலை மாற்றத்தைத் தணித்தல் உள்ளிட்ட விடயங்கள் அவற்றின் மாற்றத்தின் மீதே தங்கியுள்ளன. நீரை இலக்காகக் கொண்ட குறிப்பிட்ட நடவடிக்கைகளுடன் உலகளாவிய முக்கிய மூன்று பிரச்சினைகளுக்கு எதிராகவும் போராட வேண்டியது அவசியமாகும்.

காலநிலை மாற்றத்தால் நீர் மூலங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கு பாரிய நிதி வசதிகள் தேவைப்படுகின்றன.

காலநிலை மாற்றத்திற்கான நிதியளிப்புத் திட்டங்களுக்கு ஏற்ப உலகளாவிய வட துருவ நாடுகள் துரதிருஷ்டவசமாக தோல்வியடைந்துள்ளன. கிளாஸ்கோவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாடு முடிவடைந்த பின்னர், இதற்கான அரசியல் ரீதியான விருப்பத்தில் குறிப்பிடத்தக்க வரையறைகளை அவதானிக்க முடிகிறது.

காலநிலை அனர்த்தங்களை பொருட்படுத்ததாத நிலை மேற்குலக நாடுகள் மத்தியில் அதிகரித்து வருகிறது.

புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தத்திற்கான மாநாடு இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், அதன் இறுதி முடிவு நவம்பர் மாதம் நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை பொறுத்தே அமையும்.

உலகளாவிய வட துருவ நாடுகள், உக்ரேனில் இறப்பு மற்றும் அழிவுக்கு நிதியளிக்க தயாராக இருக்கின்றன. ஆனால் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் மரணம் மற்றும் அழிவுகளுக்கு நிதியளிப்பதில் தயக்கம் காட்டுகின்றன.

எதிர்பார்த்த அளவு மற்றும் எதிர்பார்த்த வேகத்தில் எங்களிடம் நிதிகள் வரவில்லை. இதனால் வள இடைவெளியை சமாளிக்கும் வகையில், ஊழ்ீ 28 மாநாட்டில் இலங்கை வெப்ப மண்டலப் பகுதி முன்முயற்சியை முன்வைத்தது.

இது உலகின் மூன்று மிக முக்கிய பிரச்சினைகளுக்கு ஈடுகொடுப்பதற்கு வெப்ப வலய இயற்கைக் காடுகள், சதுப்புநிலங்கள், புல்வெளிகள், நீர் மூலங்கள் மற்றும் ஏனைய இயற்கை வளங்களுக்கான வர்த்தக முதலீடுகளை பயன்படுத்திக்கொள்ள புதிய வாய்ப்பாக அமையும்.

இந்த பகுதி முழு உலகத்திற்கும் பாதுகாப்பு கவசமாக இருந்தது. தற்போதைய உலகின் மூன்று மிக முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான உந்து சக்தியாகவும் இருக்கும். வெப்ப வலயத்தில் முதலீடு செய்வது உலகின் முக்கிய 3 பிரச்சினைகளுக்கு எதிராக போராடுவதற்கு வலுசேர்ப்பதாகவும் கருதுகிறேன்.

இந்த சூழலில், உலகளாவிய கலப்பு நிதியியல் தொடர்பான திட்டம் மூலம் உலகின் தென் துருவ நாடுகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் உருவாக்க உதவுகிறது. இந்த நிதியத்தை ஆரம்பிக்கவிருக்கும் 9.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சலுகை நிதியியலுக்கு சிறந்த உதாரணமாக உள்ளது. வெப்ப மண்டல முன்முயற்சிக்கும் இந்த வசதிகள் பயனளிக்கும்.


உலக வரி ஏய்ப்புச் சொத்துக்களின் வருடாந்த இலாபத்திற்கு 10 வீதம் வரி விதிக்க இலங்கை முன்மொழிகிறது. அந்த ஆண்டு இலாபம் 1.4 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வரியை அமுல்படுத்த தவறிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு ரஷ்ய வங்கிகள் மீது விதிக்கப்பட்டதைப் போன்ற பொருளாதாரத் தடைகளை விதிப்பதன் ஊடாக இந்த வரியை விதிக்கலாம்.


காலநிலை மாற்றம் மற்றும் அதன் தணிப்புக்கான கலப்பு நிதி திட்டங்களுக்கு நிதியளிக்க இந்த வரிகள் பயன்படுத்தப்பட வேண்டும். உலகளாவிய கலப்பு நிதியியல் முன்முயற்சி, சேதம் மற்றும் இழப்பு நிதிக்கு ஒரு துணையே அன்றி மாற்றீடு அல்ல. இந்த இரண்டு நடவடிக்கைகளையும் ஒன்றாகச் செயல்படுத்த வேண்டும்.

எனவே, கூட்டமைப்பு செயலகத்தை அமைப்பதிலும், ஜி20 உச்சிமாநாட்டில் இந்த திட்டத்தை முன்வைப்பதிலும் இந்தோனேசியா மேற்கொண்ட கடின முயற்சிக்கு இந்த மாநாட்டில் எமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீர்வள முகாமைத்துவம் மற்றும் உலகளாவிய கலப்பு கூட்டமைப்பை ஒன்றிணைக்கும் வகையில் ஜனாதிபதி ஜோகோ விடோடோ வழங்கிய பங்களிப்புக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம்." – என்றார்.

இதேவேளை, இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவினால் மாநாட்டில் பங்கேற்ற அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு நேற்று முன்தினம் பாலி கலாசார பூங்காவில் வழங்கிய இரவு விருந்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார்.





# வெசாக் பண்டிகையுடன் இணைந்தாக மனதை ஒருநிலைப்படுத்தும் நிகழ்ச்சி

தற்போதைய சந்ததியினருக்கு தியானம் தொடர்பான புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில், "புத்த ரஷ்மி" தேசிய வெசாக் பண்டிகையுடன் இணைந்ததாக ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் கல்வி அமைச்சு என்பன இணைந்து ஏற்பாடு செய்த மனதை ஒருநிலைப்படுத்தி, வலுப்படுத்தும் நிகழ்ச்சி நேற்று  கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது.

வணக்கத்திற்குரிய கலாநிதி கிரிந்தே அஸ்ஸாஜி தேரரின் ஆலோசனையின் கீழ் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டுதலில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகங்கள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் தொழிநுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 500 பேர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் மீதிரிகல ஆரண்ய சேனாசனவாசி வணக்கத்திற்குரிய ஹோமாகம தம்மகுசல தேரர் மாணவர்களுக்கு "தியானம்" மேற்கொள்வது பற்றிய நடைமுறை பயிற்சிகளை வழங்கினார்.

இங்கு சிறப்புரையாற்றிய கங்காராம விகாராதிபதி கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர், நாட்டின் எதிர்காலம் சிறுவர் தலைமுறையைச் சார்ந்தது எனவும் நாட்டின் சிறுவர்களின் அறிவு, கல்வி, திறமை, திறன் என்பவற்றிலே நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஒழுக்கமும் திறமையும் கொண்ட சிறுவர் தலைமுறையை உருவாக்குவதற்கு மனதை ஒருநிலைப்படுத்துவது தொடர்பான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது மிகவும் முக்கியமானதாக இருக்கும் என்று குறிப்பிட்ட அவர் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், நாரஹேன்பிட்டிய அபயாராம விகாராதிபதி, கொழும்பு பல்கலைக்கழக வேந்தர் வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர், புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன, ஜனாதிபதி அலுவலக மேலதிக செயலாளர் கமல் புஸ்பகுமார உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.













# பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இருவரை சிறைப் பிடித்த உணவக உரிமையாளர்கள்

## தெல்லிப்பளைப் பகுதியில் நேற்றுச் சம்பவம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், தெல்லிப்பளையில் உணவுப்பொருள்கள் தயாரிக்கும் நிலையத்தில் பரிசோதனைக்கு சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்களை உணவக உரிமையாளர்கள் சிறைப்பிடித்தமையால் பரபரப்பு ஏற்பட்டது.

தெல்லிப்பளை சுகாதர வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பன்னாலைப் பகுதியில் இயங்கி வந்த - உரிய அனுமதி பெறாமல் இயங்கி வந்ததாகக் கூறப்படும் உணவுப்பொருள் தயாரிக்கும் நிலையத்தை பொதுச் சுகாதார அதகாரிகள் இருவர் நேற்றைய தினம் சோதனைக்கு உட்படுத்தினர்.

ஐரோப்பிய நாடொன்றில் குடியுரிமை பெற்றவரும், தென்னிலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவருமே இந்தத் தொழிற்சாலையை நடத்தி வந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் உணவுப்பொருள்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றபோதும் இத் தொழிற்சாலையானது இதுவரை முறைப்படியான பதிவுகளை பூர்த்தி செய்திருக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்த விடயங்கள் தொடர்பாக பதில் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனைக்கு உட்படுத்துயபோது தொழிற்சாலை பதிவு செய்யப்படாதமை கண்டறியப்பட்டுள்ளது.

பரிசோதனை அவதானிப்புகளுக்கு அமைய உரிய சட்ட நடவடிக்கை மேறகொள்வதற்காக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் உணவு தயாரிப்பு நிலைய

உரிமையாளர்களின் அடையாள அட்டையைக் கேட்டபோது சுகாதார பரிசோதகர்கள் இருவரையும் தொழிற்சாலைக்குள் வைத்து உரிமையாளர்கள் பூட்டியுள்ளனர்.

இது தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, அரை மணித்தியாலத்தின் பின்னர், தெல்லிப்பளை பொலிஸார் தலையிட்டு, பொதுச்சுகாதார பரிசோதகர்களை மீட்டெடுத்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய தொழிற்சாலை உரிமையாளரும், பெண்ணும் தலைமறைவான போதும் நேற்று மாலை இருவரும் தெல்லிப்பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.



# பொது வேட்பாளர் விடயம் குறித்து சிவில் சமூகப்பிரதிநிதிகள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு நேற்றுப் பேச்சு!

ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணித் தலைவர்களோடு சிவில் சமூகப் பிரதிநிதிகள் நேற்று மாலை 6 மணியளவில் உரும்பிராய் சிவகுமாரன் சிலை அருகில் உள்ள கூட்டுறவு அரங்கில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தும் விடயம் குறித்துக் கலந்துரையாடும் சந்திப்பை மேற்கொண்டனர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள்.









# அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் சேர்ந்து ஒருமித்த முடிவை எடுக்கவேண்டும் என்கிறார் ஈ.பி.ஆர்.எல்.எவ். துரைரெட்ணம்

(கனகராசா சரவணன்)

கடந்த காலத்தில் தமிழர்கள் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் முப்படைகளையும் வைத்திருந்தனர் என்பது வரலாறு. ஆனால் இவை இருந்தும் இலங்கை அரசாங்கமும், சர்வதேசமும் எங்களை ஏமாற்றின. நாங்கள் மலினமடைய வைக்கப்பட்டு அனைத்தையும் இழந்துள்ளோம். எனவே எமக்கு உள்ள ஒரே ஒரு பலம் வாக்குபலம். அதற்கு ஒற்றுமையே வலுச் சேர்க்கும். எமது பலம் அதுவே என்பதை நிரூபிக்க வேண்டுமாயின் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அனைத்து கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒருமித்த முடிவுகளை எடுக்கவேண்டும் என என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சிரேஷ்ட தலைவருமான இரா.துரை ரெட்ணம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஊடக மையத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கில் இறுதி யுத்தத் தின் போது இடம்பெற்ற மனித அவ லங்கள், மனித உரிமை மீறல், படு கொலைச் சம்பவங்கள் தொடர்பாக சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற் காக மிகவும் நீண்டகாலமாக பல முயற்சிகளை – பல நடவடிக்கைகளை – பல கட்சிகள், தனிநபர்கள், பொது அமைப்புக்கள், பாதிக்கப்பட்டோர் எடுத் தனர். முள்ளிவாய்காலுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை செயலாளர்நாயகம் வந்து அஞ்சலி செலுத்தியமை சர்வ தேசத்தின் பாலிவ்விடயத்தை ஈர்த்த வர்களுக்கு வெற்றியாகும். இதற்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

முள்ளிவாய்கால் நினைவேந்த லில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் நடந்து கொண்ட முறை என்பது ஏற்பு டையதல்ல. எந்த மனித நாகரிகத்தை ஏற்றுக் கொண்டவர்களும் அவர்க ளுடைய செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்ட துயரமான சம்பவங்களை வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஜனாதிபதி பொது வேட்பாளர் தொடர்பாக வடக்கு – கிழக்கில் பல கருத்துக்கள் உலாவி வருகின்றன. மீண்டும் மீண்டும் அழுத்தமாக கூறிக் கொள்கின்றோம். நான்கு தசாப்




தங்களுக்கு மேலாக வடக்கு – கிழக் கில் தமிழர்களுக்காக இருந்த ஒரு தனிமனித சுதந்திரமானது வாக்க ளிக்கும் உரிமையாகும். ஒரு தனி மனிதன் தனது உரிமையான வாக்கி னையளித்து ஒருவனை வெற்றி பெறவைப்பதற்கும் தோல்வியடைய வைப்பதற்கும் முடியும். அவனின் அந்தச் சிறப்புரிமையை எவராலும் மறுக்க முடியாது.

இதனடிப்படையில் ஒரு ஜனாதி பதியை தெரிவு செய்வதற்காக வடக்கு, கிழக்கு மக்கள் பல சந்தர்பங்களில் பகிஷ்கரித்தும், வாக்களித்தும் உள்ள னர் இந்த விடயத்தில் ஒரு சில ஜனா திபதி வேட்பாளர்களுக்கு மிகக் கூடுத லான ஆதரவு தெரிவித்த வரலாறு உண்டு. ஆனால் எமது இனப்பிரச்சினை தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட ஜனா திபதிகள் வாக்குகளைப் பெற்றுவிட்டு தமிழர்களை ஏமாற்றியமையே வர லாறு ஆகும்.

இந்த வரலாற்றை நாங்கள் மறந்து விடவில்லை. கடந்த காலத்தில் ஏற்பட்ட வலிகளை சுமந்தவர்களாக நாங்கள் இருக்கின்றோம். இப்போது எமக்கு உள்ள ஒரே ஒரு பலம் வாக்குபலம். ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் பட் சத்தில், ஏற்கனவே ஏமாற்றப்பட்ட நாங்கள் இனியும் ஏமாறக்கூடாது என்பதற்காக வடக்கு – கிழக்கில் உள்ள அரசியல் கட்சிகள், பொது அமைப்புக் கள், சமூகம் சார்ந்த அமைப்புக்கள் உட்பட அனைத்து சக்திகளையும்ம் ஒன்று சேர்த்து, எதிர்வரும் ஜனாதி பதி தேர்தல் தொடர்பாக வலுவான முடிவை எடுப்பதற்காக பொது வேட் பாளரை நிறுத்த ஆலோசனை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

சில கட்சிகள் முடிவுகளை அறி வித்துள்ளன. சில கட்சிகள் அறி விக்கவில்லை. இருந்தாலும் அனைத்து சக்திகளும் ஒன்று சேர்ந்து ஜனாதி பதி தொடர்பான ஒருமித்த முடிவுகளை எடுக்க வேண்டும். அந்த முடிவு தமி ழர்களை எதிர்காலத்தில் தலைநிமிர்ந்து வைப்பதற்கான அடிகோளாக அமைய வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பு. அதனை நிலைநாட்ட வைப்பதற்கு நாங்கள் எதிர்காலத்தில் சரியான முடிவகளை எடுக்கவேண்டும். அற்கு தமிழ் கட்சிகள் ஒன்று சேர வேண்டும்.

கடந்த காலத்தில் தமிழர்கள் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் முப்படைகளையும் வைத்திருந்தனர் என்பது வரலாறு. ஆனால் இவை இருந்தும் இலங்கை அரசாங்கமும், சர்வதேசமும் எங்களை ஏமாற்றின. நாங்கள் மலினமடைய வைக்கப்பட்டு அனைத்தையும் இழந்துள்ளோம். இன்று இவை அனைத்தும் இழந்து இடம் தெரியாது – தடம் தெரியாது – சடலங்கள் புதைக்கப்பட்ட நிலையில், குழந்தைகள் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில், தாய் தந்தையை இழந்து பரிதவிக்கின்ற நிலையில், அனைத்தை யும் பறி கொடுத்த நிலையில் எமக்கு இருக்கின்ற ஒரே ஒரு பலம் ஒற்றுமை என்பதை வடக்கு – கிழக்குத் தமிழ் தரப்புக்கள் மறந்துவிடக் கூடாது.

அது மட்டுமல்ல, கிழக்கு மாகாண மக்கள் பலவீனமடைந்திருக்கின்றோம். ஒற்றமையே எமது பலம் என்பதை நிரூபிக்க வேண்டுமாயின் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஒற்றமையாக – அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து – ஒருமித்த முடிவுகளை எடுக் கவேண்டும் எனக் கேட்டுக் கொள் கின்றேன். – என்றார்.

# விஜயதாஸா தரப்புக்கு மீண்டும் தடை உத்தரவு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவி சாளர் பதவியில் அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷவும் பதில் பொதுச் செயலாளர் பதவியில் கீர்த்தி உடவத் தவும் செயற்படுவதற்கு நேற்று முதல் எதிர்வரும் ஜுன் 3 ஆம் திகதி வரை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை யுத்தரவை பிறப்பித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் கடமைகளை மேற்கொள்வதற்கு இடையூறு விளை விப்பதைத் தடுத்து இடைக்காலத் தடை யுத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி, பதில் பொதுச் செயலாளர் எனத் தம்மைக் குறிப்பிட்டு துமிந்த திஸ நாயக்க தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி சந்துன் வித்தான இந்த உத் தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளார்.



# மக்களைப் பாதிக்கும் மதுச்சாலைக்கு அனுமதி வேண்டாம் எனப் போராட்டம்

## நானாட்டான் மக்கள் கொட்டும் மழையிலும் எதிர்ப்பு நடவடிக்கை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நானாட்டான் நகரப் பகுதிக்குள் எந்த ஒரு மது பானசாலைக்கும் அனுமதி வழங்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்து நேற்றைய தினம் திங்கட்கிழமை மதத் தலைவர்கள், பொதுமக்கள் இணைந்து நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக அடையாள கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நானாட்டான் விவசாய அமைப்பு, மகளிர் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இணைந்து நானாட்டான் சுற்றுவட்டத்தில் இருந்து நானாட்டான் பிரதேச செயலகம் வரை கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நானாட்டானில் இந்து மற்றும் கத்தோலிக்க பாடசாலைகள் அமைந்துள்ள இடங்களில் மென் மதுபான விற்பனை நிலையம் காணப்படும் அதே நேரம் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் கள்ளுத்தவறணை காணப்படுவதாகவும், மென் மதுபான சாலையை உடனடியாக அகற்றும் படியும், அதே நேரம் நானாட்டான் ஒலிமடு பகுதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணையை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யுமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

“மது பாவனையை ஊக்கப்படுத்துபவர்களே! மக்களையும் மாணவர்களையும் வாழவைக்க உதவிடுங்கள்!“, “எமக்குக் கிடைத்த சாபம் மதுக்கடை, அதை இன்றே ஒழிப்போம்“, “உழைப்பை பறிக்க வந்த சாத்தான் இந்த மதுபானமும் மதுக்கடையும்“, “குடி சிலரின் இன்பம் பலரின் துன்பம்“, “மது விற்று கிடைக்கும் காசு உனக்கே நீ தேடும் சாபம்“ போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் அருட்தந்தையர்கள், இந்து ஆலய குருக்கள், முருங்கன் விகாராதிபதி, முன்னால் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தின் இறுதியில், பாடசாலைக்கு அருகில் இயங்கி வரும் மென் மது பானசாலைக்கான அனுமதியை உடனடியாக நிறுத்தக் கோரியும், ஒலிமடுப் பகுதியில் இயங்கி வரும் கள்ளுத்தவறணையை இடம் மாற்றித் தர வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கையளிப்பதற்கான மகஜர் நானாட்டான் பிரதேச செயலாளர் திருமதி சிவசம்புகனகம்பிகையிடம் கையளிக்கப்பட்டது.









# புத்தளம் பாடசாலைகளுக்கு மேலும் இரு நாள் விடுமுறை

(ரஸீன் ரஸ்மின், எம்.எச்.எம் சியாஜ்)

நாட்டில் நிலவும் அசாதாரண கால நிலை காரணமாக இன்று 21 ஆம் திகதியும், நாளை 22 ஆம் திகதியும் புத்தளம் மாவட்டத்தின் சகல பாட சாலைகளுக்கும் விசேட விடுமுறை வழங்குமாறு வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடும் மழையின் காரணமாக ஏற் பட்டுள்ள வெள்ளம் உள்ளிட்ட அனர்த்த நிலைமைகள் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் ஆளுநர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்

மழை வெள்ளம் காரணமாக நேற்றும் புத்தளம் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

அத்துடன் புத்தளம் மாவட்டத்தில் மட்டுமன்றி வடமேல் மாகாணத்தின் சகல பிரதேசங்களிலும் வெள்ளம் உள்ளிட்ட அனர்த்த நிலைமைகள் குறித்து உடனுக்குடன் தகவல்களைச் சேகரிக்குமாறும், பாதிப்புற்ற பிர தேசங்களில் நிவாரண நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறும் அதி காரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத் துள்ளார்.

இதற்கான வடமேல் மாகாணத்தின் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செய லாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள் உள்ளிட்டோர் அனர்த்த நிவாரண நடவடிக்கைகளில் ஒன்றிணைந்த பொறிமுறையின் அடிப் படையில் செயற்பட்டு, துரித நட வடிக்கைகளை முன்னெடுக்கு மாறும் ஆளுநர் நஸீர் அஹமட் பணிப் புரை விடுத்துள்ளார்.

நிவாரண நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி வசதிகளை மாகாண சபை நிதி மூலமாகப் பெற்றுத் தருவார் எனவும் ஆளுநர் உறுதியளித்துள்ளார். தேவையேற்படும் பட்சத்தில் மத்திய அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி நிதி என்பவற்றில் இருந்தும் நிதி ஒதுக் கீடுகளைப் பெற்றுக் கொள்ள நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் நஸீர் அஹமட் மேலும் குறிப்பிட் டுள்ளார்.

# புத்தளம் மாவட்டத்தில் வெள்ளத்தால் 32 ஆயிரத்து 710 பேருக்குப் பாதிப்பு

(ரஸீன் ரஸ்மின்)

கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் 8,780 குடும்பங்களைச் சேர்ந்த 32,710 பேர் பாதிக்கப்பட்டுள் ளனர் எனப் புத்தளம் மாவட்ட செய லாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தெரி வித்துள்ளார்.

கடந்த இரண்டு நாள்களாக பெய்த கடும் மழை காரணமாக புத் தளம் மாவட்டத்தில் 9 பிரதேச செய லகப் பிரிவின் 78 கிராம சேவகர் பிரிவு களில் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள் ளது.

புத்தளம் மாவட்டத்தின் மஹா கும்புக்கடவல, கருவலகஸ்வெவ, மாதம்பை, முந்தல், புத்தளம், சிலாபம் மற்றும் ஆராச்சிக்கட்டுவ, கற்பிட்டி , மற்றும் வன்னாத்தவில்லு ஆகிய பிர தேச செயலகப் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் வாழும் மக்கள் இந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்டுள்ளனர்.

இதில் புத்தளம் பிரதேச செயல கப் பிரிவில் அதிகமான குடும்பங் கள் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு 12 கிராம சேவகர் பிரிவில் 6,815 குடும்பங் களைச் சேர்ந்த 25,529 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர் எனவும் மாவட்டச் செயலாளர் கூறினார்.

அத்துடன், வன்னாத்தவில்லு பிர தேச செயலகத்திற்குற்பட்ட 4 கிராம சேவகர் பிரிவில் 180 குடும்பங்க ளைச் சேர்ந்த 636 பேரும், முந்தல் பிரதேச செயலகப் பிரிவில் 20 கிராம சேவகர் பிரிவிகளில் 48 குடும்பங் களைச் சேர்ந்த 302 பேரும், மஹா கும்புக்கடவல பிரதேச செயலகப் பிரி வுக்கு உட்பட்ட 8 கிராம சேவகர் பிரிவு களில் 59 குடும்பங்களைச் சேர்ந்த 187 பேரும், கற்பிட்டிப் பிரதேச செய லகப் பிரிவுக்கு உட்பட்ட ஒரு கிராம சேவகர் பிரிவில் 76 குடும்பங்களை



சேர்ந்த 264 பேரும், கருவலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 5 கிராம சேவகர் பிரிவுகளில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 109 பேரும், சிலாபம் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 10 கிராம சேவகர் பிரிவுகளில் 251 குடும்பங்களை சேர்ந்த 1,059 பேரும், ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 14 கிராம சேவகர் பிரிவுகளில் 491 குடும்பங் களைச் சேர்ந்த 1,741 பேரும், மாதம்பை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 4 கிராம சேவகர் பிரிவுகளில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 143 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, வெள்ளம் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் ஒன்பது வீடு களும், ஒரு வர்த்தக நிலையமும் சேதமடைந்துள்ளன என அறிக்கை யிடப்பட்டுள்ளது.

மேலும், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் 537 குடும்பங் களைச் சேர்ந்த 1,775 பேர் பாதுகாப் பான இடங்களில் தங்கவைக்கப்பட் டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இதற்காக புத்தளம் பிரதேச செய லகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 6 பாதுகாப்பு நிலையங்களும், முந்தல் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதி களில் 3 பாதுகாப்பு நிலையங் களும், மஹாகும்புக்கடவல பிரதேச செயலகத்தில் ஒரு பாதுகாப்பு நிலை யமும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு புத்தளம் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 10 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான குடிதண் ணீர் மற்றும் சமைத்த உணவுகள் அந் தந்தப் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையில் பிரதேச செயலக ஊழியர்கள், அரச அதிகாரிகள், பாதுகாப்பு பிரிவினரின் ஒத்துழைப் பில் வழங்குவதற்கான ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன எனவும் புத் தளம் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, புத்தளம் நகர சபை, புத்தளம் பிரதேச சபைகளுக்குற்பட்ட பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தொண்டர் அமைப் புக்களும், மஸ்ஜித் நிர்வாகிகளும், சமூக அமைப்பினர்களும் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

அத்துடன், கடந்த இரண்டு நாள் களாகப் பெய்த கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியிருந்தது.

இதனால், பாடசாலைகள் , அரச அலுவலகங்கள் உட்பட பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. வெள்ள அனர்த் தம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

# நுவரெலியா மாவட்டத்திலும் பெரு மழை கொட்டுகிறது!





**(செ.தி.பெருமாள்)**

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாகப் பெய்து வரும் தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்க பட்டுள்ளது.

குறிப்பாக பெருந் தோட்ட தொழிலாளர்கள் மற்றும் பண்ணையாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்க பட்டுள்ளது.

அத்துடன் விடுமுறையின் பின் இன்று ஆரம்பமான அரச பாடசாலைகளுக்கு மாணவர்கள் மிக மிக குறைந்த அளவில் வருகை தந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு நாள்களாகப் பெய்து வரும் மழையால் ஓடைகள், ஆறுகள் மற்றும் அருவிகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டங்களும் சற்று உயர்ந்து வருகின்றன.

குறிப்பாக மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் 4 அடி உயர்ந்து உள்ளது. அதே போல் காசல்ரீ நீர் தேக்கத்தின் நீர் மட்டம் 8 அடி உயர்ந்து உள்ளது. மேல் கொத்மலை நீர் தேக்கத்தின் நீர் மட்டமும் வெகுவாக உயர்ந்தது கொண்டு உள்ளது.

சிவனடி பாத மலைக்கு அருகில் உள்ள பகுதிகளில் உள்ள அனைத்து அருவிகளும் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. பெருமழையால் படிக்கட்டுகள் வழியாகவும் அதிகளவில் நீர் வடிந்தோடி வருகின்றது. அதனால் மலைக்கு படிக்கட்டுகளில் ஏறிச் செல்ல முடியாது உள்ளது.

மாலை வேளைகளிலும் அதி காலை வேளையிலும் அதிக அளவில் பணி மூட்டம் காணப் படுவதால் வாகன சாரதிகளை மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார வேண்டுகோள் விடுத்து உள்ளார்.

# மிகப் பெறுமதிமிக்க நீலத் தூணா மீன் காரைதீவு மீனவர்களிடம் பிடிபட்டது!

**( வி.ரி.சகாதேவராஜா, பாறுக் ஷிஹான்)**

காரைதீவில் கோடி ரூபா பெறுமதியானது எனக் கருதப்படும் நீல கிளவல்லா (தூணா) இன மீன் நேற்று திங்கட்கிழமை பிடிபட்டுள்ளது.

காரைதீவு பகுதியில் இருந்து ஆழ் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களின் தூண்டிலில் 49 கிலோ எடையுள்ள நீல தூணா அல்லது உள்ளூரில் நீல ஹெலவள்ளா(ஹென்டர்) என அழைக்கப்படும் பாரிய மீன் சிக்கியுள்ளது.

பெரிய கண் மற்றும் நீல நிற வர்ணங்களை கொண்டுள்ள இந்த மீன் அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் மீனவரின் தூண்டிலில் பிடிக்கப்பட்டுள்ளது. இந்த மீனை விற்பதற்கான முயற்சியில் மீனவர்கள் இறங்கியுள்ளனர்.

ஒரு கிலோ தூணா மீன் பல லட்சம் ரூபா கணிப்பிடப்பிடப்படக்கூடியது.

ஆனால் இங்கு பிடிபட்ட மீன் முறைப்படி இனங்கண்டு முறையாகப் பேணப்படாமையினால் கிலோ 3 லட்சம் ரூபா வரை விலை பேசப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடும் போராட்டத்திற்கு மத்தியில் பிடிக்கப்பட்ட குறித்த மீன் இனங்கள் 7 வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. யாவும் பெறுமதி மிக்கனவாக உள்ளன. பாரிய மீன்களை கொள்வனவு செய்கின்ற நிறுவனங்களே இவ்வாறான மீன்களை அதிக விலை கொடுத்து வாங்குகின்றன எனவும் மீனவர்கள் குறிப்பிட்டனர்.



# நாட்டில் மழையுடனான வானிலை தொடரும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு



தென்மேல் பருவப்பெயர்ச்சி ஆரம்பித்துள்ளதால் நாட்டில் காற்றுடன் கூடிய மழை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களின் சில பகுதிகளில் 150 மில்லிமீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணம், காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

தலைநகரிலும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. கம்பஹா மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பலத்த மழை பெய்து வருகின்றது.

நீர்கொழும்பு நகரிலும் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதுடன், உள்வீதிகள் சிலவற்றில் நீர் தேங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பல பகுதிகளில் தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றது.

மட்டக்களப்பு – சித்தாண்டி சந்தன மடு ஆறு பெருக்கெடுத்தமையால் தரை வழி போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

சித்தாண்டியிலிருந்து ஈரளக்குளம் செல்லும் 12 கிராமங்களில் உள்ள 345 மேற்பட்ட குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

ஈரளக்குளம் உள்ளிட்ட பல பகுதிகளுக்கு செல்லும் மக்கள் பாதுகாப்பற்ற தோணியில் பெரும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்து செய்து வருகின்றனர்.

அனுராதபுரத்தின் பல பகுதிகளிலும் பெய்து வரும் மழையினால் அப்பகுதியிலுள்ள குளங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றது.

மலையத்தின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில பகுதிகளில் மண்மேடுகள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன், சில பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்தும், ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், மவுசாகலை மற்றும் காசல்ரீ நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது.

அத்தனகலு ஓயாவின் தூனமலை பகுதியில் சிறிதளவில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதனால் தாழ்நிலப்பகுதியில் வாழும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. களு கங்கையிலும் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

பலத்த மழையினால் உடவளவ, அங்கமுவ, இராஜாங்கனை மற்றும் பொல்கொல்ல நீர்த்தேக்கங்கள் வான்பாய்வதாக நீர்ப்பாசன திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நேற்று காலை 8.30 உடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் குளியாப்பிட்டிய பகுதியிலேயே அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. குளியாப்பிட்டியில் 141.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அந்தக் காலப்பகுதியில் தும்மலசூரிய பகுதியில் 136.7 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் மொரலிய ஓய பகுதியில் 127.4 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

# 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



நிலவும் மழையுடனான வானிலையால் 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிருலப்பனை பூர்வாராம வீதியில் ஓட்டோ மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.


நிலவும் பலத்த மழையுடன், பேருவளை முதல் காலி மற்றும் அம்பாந்தோட்டை, பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களுக்கு அப்பாலுள்ள கடற்பிரதேசத்தில் காற்று மணித்தியாலத்திற்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கற்பிட்டியிலிருந்து கொழும்பு ஊடாக பேருவளை வரையான கடற்பிரதேசங்களுக்கு அப்பாலுள்ள கடற்பகுதிகளில் காற்று மணித்தியாலத்திற்கு 50 முதல் 55 கிலோ மீற்றர் வரை வேகத்தில் வீசக்கூடும் என்பதுடன் கடல் சீற்றம் அதிகரிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கற்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களுக்கு அப்பாலுள்ள கடற்பிரதேசங்களில் கடலலை 2.5 மீற்றர் முதல் 03 மீற்றர் வரை உயரக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதிகளில் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என மீனவர்களுக்கும் கடல்சார் ஊழியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஈரான் ஜனாதிபதியின் மறைவு அதிர்ச்சிக்குரியது; முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரங்கல்




ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரங்கல் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ நேற்று இப்ராஹிம் ரைசியின் மறைவை கேள்வியுற்று இலங்கையில் உள்ள ஈரானியத் தூதரகத்திற்குச் சென்றுள்ளார்.

அங்கு ஈரானிய தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்கோஷ் சந்தித்து இரங்கலை தெரிவித்தமையோடு, இரங்கல் புத்தகத்தில் குறிப்பொன்றையும் பதிவிட்டுள்ளார்.

இதுதொடர்பில் எக்ஸ் தளத்தில் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள இரங்கலில்,

"ஹெலிக்கொப்டர் கோர விபத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் அவருடன் சென்ற பல மூத்த அதிகாரிகள் உயிரிழந்தமை ஆழ்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதி ரைசி இலங்கையின் உண்மையான நண்பராக இருந்தார். ஈரான் மக்கள் மீது அவர் கொண்ட தலைமைத்துவமும் அர்ப்பணிப்பும் என்றும் நினைவுகூரப்படும்." என குறிப்பிட்டுள்ளார்.



# காற்றில் பறக்கும் வெசாக் பந்தல்கள்

வெசாக் பண்டிகை நாளை மறுதினம் 23 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நாடாளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளில் வெசாக் பந்தல்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், சீரற்ற வானிலை காரணமாக கொழும்பின் சில பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டு வந்த பந்தல்கள் இன்று சரிந்து விழுந்துள்ளன.

இதன்படி, கொழும்பு – கொம்பனி வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வந்த பந்தல் சரிந்து விழுந்துள்ளது.

இதேபோன்று, கொழும்பு – காலி முகத்திடலில் நிர்மாணிக்கப்பட்டு வந்த பந்தலும் சரிந்து விழுந்துள்ளது.

காலி முகத்திடலில் சரிந்து விழுந்த தோரணத்தின் ஆரம்ப பணிகள் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் கடந்த 11 ஆம் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்க 4 மகாநாயக்கர்களும் வேண்டுகோள்

## ஜனாதிபதிக்கு அவர்கள் கடிதம்

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்குமாறு மல்வத்து, அஸ்கிரி, ராமன்ன நிகாயா, அமரபுர மகா சங்க சபை பீடாதிபதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2016 ஆம் ஆண்டு கூரகல ரஜமஹா விகாரை தொடர்பான ஊடக விவாதத்தின் போது இன முரண்பாட்டை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கலபொட அத்தே ஞானசார தேரருக்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி நான்கு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் பௌத்த பீடாதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சமூகத்தில் இடம்பெறும் தீவிரவாதச் செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளை எச்சரிக்க ஞானசார தேரர் நடவடிக்கை எடுத்துள்ளார். அவரது நடவடிக்கைகள் அரச பாதுகாப்புப் படைகளுக்கு முக்கியமான ஆதரவை வழங்கியது, இலங்கையில் சில தீவிரவாதக் குழுக்கள் பரவுவதைத் தடுக்க உதவியது.

இதன் விளைவாக, இலங்கை சமூகத்தில் பல சாத்தியமான தீவிரவாத மோதல்கள் தவிர்க்கப்பட்டதாக அவர்கள் குறித்த கடித்த்தில் குறிப்பிட்டுள்ளனர்.



# சகோதரியின் பெயரில் கடவுச்சீட்டு பெற்று டென்மார்க் சென்ற பெண் யாழில் கைது!

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தனது சகோதரியின் பெயரில் கடவுச்சீட்டு மற்றும் வங்கி ஆவணங்களை போலியாக பெற்ற குற்றச்சாட்டில் டென்மார்க் பிரஜையான பெண்மணியை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாக கொண்டு தற்போது டென்மார்க் பிராஜாவுரிமை பெற்று டென்மார்க்கில் வசிக்கும் 42 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கடந்த 2015ஆம் ஆண்டளவில் தனது சகோதரியின் பெயரில் போலியான கடவுச்சீட்டைப் பெற்று டென்மார்க் நாட்டிற்குச் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வசித்த அவரது சகோதரி 2019ஆம் ஆண்டளவில் தனக்கு கடவுச்சீட்டு எடுப்பதற்காக விண்ணப்பித்த போது , அவரது பெயரில் ஏற்கனவே கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அவருக்கு கடவுச்சீட்டு வழங்கப்படவில்லை. அதன் போதே தனது சகோதரி தனது பெயரில் கடவுச்சீட்டு எடுத்து வெளிநாடு சென்ற விடயம் அவருக்குத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தனது தாயாரின் இறுதிக் கிரியைக்காக டென்மார்க்கில் இருந்து வந்தவர், போலியான கடவுச்சீட்டை பயன்படுத்தி தனது சகோதரியின் பெயரில் யாழ்ப்பாணத்தில் வங்கி கணக்கொன்றினையும் ஆரம்பித்துள்ளார்.

இது தொடர்பில் அறிந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சகோதரி யாழ்ப்பாண பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், டென்மார்க் பிரஜையான பெண்ணை கைது செய்து, விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.05.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.

இன்று சிறந்த ஆற்றலுடன் காணபடுவீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆற்றலும் ஆரோக்கியமும் குறைந்து காணப்படும். தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.05.2024




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies | Kelsey Homes 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co | Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park